DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 87/2019**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர். ஜெகன்நாதன் | Caste: | |
| Father's Name: | இராமகிருஷ்ணன் | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 47 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 14.11.2025

(எதிரிகள் ஆஜர். )

**முதன்மை விசாரணை**

நான் தற்போது பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.01.2019 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நான் பரமக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது பரமக்குடி தாலுகா உதயபுலி அஞ்சல் மூவலூர் கிராமத்தை சேர்ந்த நாகு மகன் பிரபு, வயது 33 என்பவரை மூன்று தெரிந்த நபர்கள் அவரை வீட்டில் வைத்து மாலை 3.00 மணியளவில் கத்தியால் தாக்கியதில் அவருக்கு 0.5x0.5x0.5 cm அளவில் நடுமுதுகில் ஒரு குழி போன்ற காயம் காணப்பட்டது. மேலும் அவருடைய நடுவயிற்றில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்ற வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7**. 14 செ.மீ நீளமுள்ள இரும்பு கத்தியால் குத்தினால்

காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

குழிகாயத்தை பொதுவாக ஆங்கிலத்தில் Punctured wound என்று கூறுவார்கள் என்றால் சரிதான். கத்தி போன்ற ஆயுதத்தால் குழி காயம் ஏற்படும்போது அதற்கு Incised wound என்றும் ஊசி போன்ற ஆயுதத்தால் ஏற்படும் காயங்களை Punctured wound என்றும் எழுதுவோம். 0.5 ஆழத்தில் உள்ள காயம் சிறிய அளவு என்றால் சரிதான். இரண்டாவது காயம் கடினமான பொருளின்மீது விழ நேர்ந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். Incised wound முதல் காயம் கம்பி வேலியில் தடுமாறி விழ நேர்ந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.87/2019**

அ.சா.10

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. விக்னேஷ்வரன் | Caste: | |
| Father's Name: | கணேசன் | Calling: | சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 34 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 14.11.2025

( எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது இராமநாதபுரம் Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019ம் ஆண்டு நயினார்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 18.01.2019ம் தேதி நான் நயினார்கோவில் கிராம பகுதிகளில் ரோந்தில் இருந்தபோது 18.30 மணிக்கு பரமக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலின்பேரில் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு இரவு 8.00 மணிக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மூவலூரை சேர்ந்த நாகு மகன் பிரபு என்பவரை விசாரணை செய்தபோது அவர் எழுதிக்கொடுத்த புகார் மனுவைப் பெற்று இரவு 9.00 மணிக்கு நயினார்கோவில் காவல்நிலையத்தில் திரும்ப வந்து புகாரை பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப கு.எண். 7/2019 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 379(NH), 506(ii) IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Amendment Act 2015 ஆக வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவையும்

முதல் தகவல் அறிக்கையையும் கனம் முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கும், புலன் விசாரணைக்காக பரமக்குடி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளரின் பார்வைக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

புகாரில் 7 நபர்கள் என எழுதப்பட்டு பிறகு 10 நபர்கள் என அடித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் மூன்று நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மூவலூர் கிராமத்திற்கும் நயினார்கோவில் காவல்நிலையத்திற்கும் சுமார் 10-11 கி.மீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். சம்பவம் 18.01.2019 ம் தேதி மாலை 3.00 மணியளவில் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையை 18.01.2019 ம் தேதி இரவு 9.00 மணியளவில் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். நயினார்கோவில் காவல்நிலையத்திலிருந்து பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு ஒரு மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை 19.01.2019 ம் தேதி இரவு 10.00 மணியளவில் பரமக்குடி நீதித்துறை நடுவரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கு காரணம் பின்னிட்டு என்னுடைய ஆலோசனையின்பேரில் பொய் புகார் தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டதால்தான் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை

செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)